C.C 368/15
PW 3
**பெயர் ரமேஷ்**
**தேதி** 16.092022

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து 4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இந்தவழக்கில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் நான் தான் நகைமதிப்பீட்டாளராக வேலை பார்த்தேன் என்றால் சரிதான். எப்போது எந்த தேதியில் நகை அடமானம் கொடுக்கப்பட்டது என்று ஞாபகம இல்லை. எந்த தேதியில் நகை கடன் தணிக்கை செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நான் 2008 முதல் சம்பவம் நடந்த வரை நான் மேற்படி வங்கியில் நகை மதிப்பீட்டாளராக வேலை பார்த்தேன். அதற்கு பின்பு வேலை பார்க்கவில்லை. அதற்குபின்பு மேற்படி வங்கியில் வேலை பார்த்தேனா என்றால் நகைமதிப்பீட்டாளராக வேலை பார்க்கவில்லை. தொகை வசூல் செய்துகொடுக்கும் வேலை பார்த்து வந்தேன். நகைமதிப்பீட்டாளராக வேலை பார்ப்பதற்கு நான் அரசாங்கத்திடமிருந்தும், ரிசர்வ் வங்கியிலிருந்தும் சான்று வாங்கியுள்ளேனா என்றால் அரசாங்கத்திடமிருந்து வாங்கியுள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. போலிச் விசாரணையில் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. நான் சான்றிதழ் வாங்கியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. இந்த வழககில் சம்மந்தப்பட்ட நகை போலியானது என தெரிந்ததால் என்னை பணிநீக்கம் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி நகைகளை மீட்க சொல்லி அறிவிப்பு அனுப்பியதாக நான் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. மீதியுள்ள 8 நகைகளை மீட்க சொல்லி சம்மந்தப்பட்ட நபர்களுக்கு அறிவிப்பு அனுப்பினோமா என்றால் அது கிளைமேலாளருக்கு தான் தெரியும். அந்த சமயத்தில் கணக்கீட்டாளர் பணியில் இருந்தார். அவர் பெயர் தெரியாது. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என் சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிப்பதால் என் மீது குற்றநடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. நகை அடகு வைக்கும் பயனாளிகளுக்கு நகை குரிய பணத்தை எந்த விதத்தில் கொடுப்போம் என்றால் அவரகளது வங்கி கணக்கிற்கு அனுப்பி அவர்கள் அதை பெற்றுக்கொள்வார்கள். நான் பணத்தை கொடுத்துவிடுவேன்.இளநிலை உதவியாளர் வங்கி கணக்கில் அதை ஏற்றுவார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வங்கி கணக்கீட்டாளருக்கு தான் வங்கி கணக்கில் பணம் செலுத்தும் அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. நகை கடன் சம்மந்தமாக என்ன என்ன ஆவணங்களை மதிப்பீட்டாளர் என்ற முறையில் பராமரிப்பேன் என்றால் அடையாள அட்டை, போட்டோ ஆகியவற்றை பராமரிப்பேன். விண்ணப்ப படிவத்தினை வங்கி அலுவலர் எடுப்பார் நான் எடுக்கமாட்டேன். வங்கியின் அதிகாரம் பெற்ற அலுவலர் இல்லை என்றும், வங்கி நடைமுறை எனக்கு எதுவும் தெரியாது என்றும் வங்கியில் பணிபுரிய எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. 4ம் எதிரி மீது வெங்கடேஷ்பாபு என்பவர் கொடுத்த புகாரை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. மேற்படி வெங்கடேஷ்பாபு என்பவர் தானே வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக தானே பணத்தை வங்கியில் செலுத்திவிட்டார் என்று எனது வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் 4ம் எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி வாக்குமூலம் அளித்துள்ளதால் என்னுடைய வாக்குமூலமும், முதல்விசாரணையும் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 4ம் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுதபடிக்க தெரியும். 4ம் எதிரி

தேனி வங்கி கிளைக்கு சென்றதில்லை என்றாலும் வங்கி அதிகாரிகளை சந்தித்தது இலல்ல என்றாலும் சரியல்ல. எம்டிசிசி வங்கிக்கு 4ம் எதிரி சொல்லவில்லை என்றாலும் வங்கி அதிகாரிகளை சந்தித்தது இல்லை என்றாலும் சரியல்ல. ஐசிசி, தாய்கோ வங்கிக்கு 4ம் எதிரி சொல்லவில்லை என்றாலும் வங்கி அதிகாரிகளை சந்தித்தது இல்லை என்றாலும் சரியல்ல. சிறப்பு தணிக்கை அதிகாரி தணிக்கை செய்யும் போது நான் அங்கு இல்லை. போலி நகை என தெரிந்தவுடன் உடனடியாக புகார் கொடுக்கவேண்டும என்றும் காலதாமதமாக புகார் கொடுக்ககூடாது என்றால் சரிதான். போலிசார் மறுவாக்குமூலம் வாங்குவதற்காக அறிவிப்பு கொடுத்தார்களா என்று ஞாபகம் இல்லை. நான் முன்னுக்கு பின் முரணாக வாக்குமூலம் கொடுத்துசாட்சியம் அளித்துள்ளதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. நம்பிக்கை மோசடிக்காக என் மீது தான் புகார் கொடுத்து முதல் குற்றவாளியாக சேர்த்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. என்னை தற்காலிகமாக பணிநீக்கம் செய்துள்ளார்கள் என்றும், வங்கியில் நான் பணி செய்ய எனக்குதகுதி இல்லை என்றால் சரியல்ல.